## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

நிகழும் ஸ்ரீ சுபகிருது வருடம் ஆடி மாதம் 12 ம் தேதி ஆங்கில ஆண்டு 28.07.2022 ம் தேதி வியாழக்கிழமை மாலை 03.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரண கூட்டம் நகர்மன்ற தலைவர் தலைமையில் நடைப்பெற்றது.

**நாள் : 28.07.2022**
**இடம்: மேட்டூர் அணை.**

**நகர்மன்ற தலைவர்,**
**மேட்டூர் நகராட்சி.**

**மன்றப்பொருள்**

**1.** நகராட்சி ஆணையாளரின் ஜுலை–2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.80 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

2. மேட்டூர் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட 30 வார்டுகளும் உள்ள கட்டிடங்கள் மற்றும் காலிமனைகளுக்கு அரசாணை எண்.52(ந.நி.பு) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.03.2022ன் படியும் இந்நகர்மன்ற தீர்மான எண்.40 நாள்.23.05.2022ன் படியும் பொது சீராய்வு செய்யப்பட்டது. அதன்படி உயர்த்தப்பட்ட கட்டிடங்கள் மற்றும் காலிமனைக்கு விசேச அறிவிப்பு சம்மந்தப்பட்ட உரிமைதாரருக்கு வழங்கப்பட வேண்டும். எனவே சிறப்பு அறிவிப்பு திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிக்கோ சர்வ் நிறுவனத்தில் அச்சடித்து பெறவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2. அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் சிறப்பு அறிவிப்பு உடனடியாக வழங்கப்பட வேண்டியதனை கருத்ததில் கொண்டு நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்வ் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதனை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3492/2022/அ1**

**தீர்மான எண்.81 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**3.** மேட்டூர் நகரமானது சுற்றுலா பகுதி என்பதாலும் ஆடி மாதம் காவேரி ஆற்றங்கரைக்கு பொதுமக்கள் அதிகளவு வருகை தருவதாலும், பொதுமக்கள் பயணித்து வரும் வாகனங்களை இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிறுத்தம் செய்கிறார்கள். இந்நகராட்சியின் வருமானத்தை பெருக்கிடும் பொருட்டு அவ்வாறு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆடி மாதம் 9 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை ( ஆடி18 ஆம் தேதி நீங்கலாக ) வாகனங்கள் பஸ், வேன் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தம் செய்யும் சுற்றுலா பயணிகளிடம் கட்டணம் வசூலிக்க குறுகிய கால பொது ஏலம் நடத்திடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதியும், நகராட்சி வருமானத்தை பெருக்கிடும் பொருட்டும் நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறுகிய கால பொது ஏல நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.3476/2022/அ2**

**தீர்மான எண்.82 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

4. மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட காவிரி ஆற்று படுகையில் அமைந்துள்ள முனியப்பன் கோவில், காவிரி பாலம் மற்றும் ஆற்றோர பகுதிகளில் வருகின்ற 03.08.2022 அன்று ஆடி 18 பண்டிகையை முன்னிட்டு சுமார் 50,000 வெளியூரிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் பொது மக்கள் புனித நீராட உள்ளதால், நோய் தொற்று ஏதும் பரவாமல் கட்டுப்படுத்தவும், பொதுமக்கள் கூடவுள்ள மேட்டூர் அணை, பெரிய பூங்கா, பேருந்து நிலையம் மற்றும் ஆற்றோர பகுதிகளில் கிருமி நாசினி மருந்துகள் தெளித்து தூய்மைப்படுத்தவும், இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு கீழ்க்கண்ட கிருமி நாசினி மற்றும் தளவாடப்பொருட்கள் தேவைப்படுகின்றது.

| வ. எண் | பொருட்கள் விபரம் | தேவைப்படும் எண்கள் / அளவு |
|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுடர் | 8000 கிலோ |
| 2 | சுண்ணாம்பு தூள் | 8000 கிலோ |
| 3 | லெமன் கிராஸ் ஆயில் | 40 லிட்டர் |
| 4 | கம்பூட் | 30 எண்கள் |
| 5 | தொப்பி | 64 எண்கள் |
| 6 | மரம் அறுவை இயந்திரம் | 1 எண் |

மேற்கண்ட பொருட்களை வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ.6.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும் நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்த புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.3492/2022/எச்1**

**தீர்மான எண்.83 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**5.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் ஆடி 18 பண்டிகை கொண்டாடப்படுகிறது. மேற்படி பண்டிகைக்கு வரும் பொதுமக்கள் இருசக்கர, கார் மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்தம் செய்ய அரசு மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்திலும், தூக்கணாம்பட்டி நகராட்சி பள்ளி மைதானத்திலும் மற்றும் பொன்னகர் நகராட்சி துவக்கப்பள்ளி மைதானத்திலும் ஒவ்வொரு ஆண்டும் இடத்தை ஒதுக்கீடு செய்யப்பட்டும், அவ்வாறு நிறுத்தம் செய்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கவும் பொது ஏலம் நடத்தப்பட்டு வருகிறது. அவ்வாறே இந்த ஆண்டும் (03.08.2022) அன்று இருசக்கர, கார் மற்றும் கனர வாகனங்கள் நிறுத்தம் செய்பவர்களிடம் கட்டணம் வசூலிக்க பொது ஏலம் நடத்திடவும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதியும், நகராட்சி வருமானத்தை பெருக்கிடும் பொருட்டும் நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறுகிய கால பொது ஏல நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.3475/2022/அ2**
**தீர்மான எண்.84 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**6.** மேட்டூர் நகராட்சி அலுவலக பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள், பிரிண்டர்கள் Xerox Machine-களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்ய ஏதுவாக நடப்பு ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு (AMC) செய்து தர இந்நகராட்சி உதவி கணினி திட்ட அமைப்பாளர் கோரியுள்ளார். மேலும் கணினி பயன்பாடு அத்தியாவசிய தேவையாக இருப்பதால் பழுது ஏற்பாடு பொழுது உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளதால் வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள வேண்டி உள்ளது. எனவே கணினி, Printer மற்றும் Xerox Machine-களின் வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1615/2022/இ1**
**தீர்மான எண்.85 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**7.** மேட்டூர் நகராட்சி தங்கமாபுரிபட்டிணம் பகுதியின் தொப்பூர்–மேட்டூர்–பவானி–ஈரோடு தேசிய நெடுஞ்சாலையில் 9 m உயரம் கொண்ட, 8 முக 150W திறன் கொண்ட சிறிய உயர்மின் விளக்கு கோபுரம் (Mini High Mast Light) அமைக்க கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட் நிறுவனத்தின் துணைத்தலைவர் (Vice President) தனது 17.06.2022–ம் தேதிய கடிதத்தில் தடையின்மை சான்று வழங்கக் கோரியுள்ளார்.

எனவே மேற்கண்ட சிறய உயர்மின் கோபுர விளக்கின் மூலம் அப்பகுதி வழியாக செல்லும் வாகன ஓட்டிகள், பொதுமக்கள் என சுமார் 5000 பேர்கள் பயன் பெறுவார்கள்.

மேற்படி, கெம்பிளாஸ்ட் சன்மார் நிறுவனத்தால் புதியதாக அமைக்கப்பட உள்ள, புதிய உயர்மின் கோபுர விளக்கு அமைக்க தடையில்லா சான்று வழங்கவும், மேற்படி உயர்மின் கோபுர விளக்கினை நகராட்சியில் பராமரிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.3040/2022/இ1**
**தீர்மான எண்.86 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**8.** மேட்டூர் நகராட்சி பகுதியில் சிறப்பு சாலை திட்டம் **2020–2021–ன்** கீழ் பத்து சிப்பங்கள் 44 சாலைகள் தார் சாலைகளை புதுப்பிக்கும் பணிக்காக 44 சாலைகள் **ரூ.1650** இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையானது கடனாகும். இந்நகராட்சியின் நிதி பற்றக்குறையாக இருப்பதால் கடன் தொகை திருப்பி செலுத்த இயலாத நிலை என்பதால் இவ்வலுவலக ந.க.எண்.**3470/2020/**இ1 நாள்.**01.11.2021–ன்** படி பணிகள் துவங்கப்படாத நிலையில் இருந்த முதற்கட்டமாக ஏழு சாலைகள் இரத்து செய்து உத்திரவு வழங்குமாறு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் கோரப்பட்டது. மீண்டும் இவ்வலுவலக இதே எண்ணிடப்பட்ட **2501.2022–ந்** தேதிய கடிதத்தின் மூலம் இரண்டாவது கட்டமாக பணிகள் துவங்கபடாத நிலையில் இருந்த நான்கு சாலை பணிகளையும் இரத்து செய்யுமாறு கோரப்பட்டது அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.**20557/2021/**இ1 நாள்.**3011.2021** மற்றும் **21.05.2022** செயல்முறை உத்திர்வின்படி **11** சாலை பணிகள் ரூ.**537.27** இலட்சத்திற்கான பணிகள் இரத்து செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது.

தற்போது மேட்டூர் நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகளுக்காக சாலைகள் முழுமையாக தேமடைந்துள்ளதால் மேற்படி திட்டத்தில் தார் சாலைகளை பொதுமக்களின் நலன் கருதி புதுப்பிக்கப்பட வேண்டும். எனவே ஏற்கனவே சிறப்பு சாலை திட்டம் 2020–2021–ன் கீழ் சேர்க்கப்பட்டு இரத்து செய்யப்பட்ட கீழ்கண்ட தார்சாலைகளை புதுப்பிக்க ஏதாவது ஒரு நிதியில் மானியமாக இந்நகராட்சிக்கு ரூ.537.27 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்ய கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | சிப்பம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான ஹாஸ்பிட்டல் காலணி முதல் இரண்டாம் குறுக்கு தெரு ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல். | IV | 38.21 |
| 2 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான ஹாஸ்பிட்டல் காலணி மேற்குபக்க சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல். | IV | 13.73 |
| 3 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான குமரன் நகர் நகராட்சி துவக்கப்பள்ளி முன்பக்க சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல். | IV | 36.50 |
| 4 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான வட்டார போக்குவரத்து அலுவலர் சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல். | V | 27.46 |
| 5 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான தங்கமாபுபட்டிணம் அண்ணாநகர் சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல். | V | 10.28 |
| 6 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான எலிக்கரடு தெற்குபக்க சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல். | VII | 35.73 |
| 7 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான குமரன் நகர் மெயின் ரோடு ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல். | X | 51.33 |
| 8 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான முத்தாலம்மன் காடு பிரதான சாலை | I | 56.48 |
| 9 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான ராஜாஜி நகர் முதல் மற்றும் இரண்டாம் குறுக்கு வீதி , ஆண்டிகவுண்டர் நகர் வடக்கு பக்க தெரு , அம்மன் நகர் தெற்கு பக்க தெரு ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | II | 76.02 |
| 10 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான வ.உ.சிநகர் குறுத்தெரு, தங்கமாபுரி பட்டிணம் நகராட்சி துவக்கப்பள்ளி முன்புற சாலை மற்றும் தங்கமலை முருகன் கோவில் சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | V | 75.26 |

| | | | |
|---|---|---|---|
| 11 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான மாதையன் குட்டை சுடுகாடு செல்லும் சாலை, ஸ்டேட் பேங்க் பணியாளர் குடியிருப்பு சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | VII | 116.27 |
| | **மொத்தம்** | | **537.27** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:3470/2020/இ1**

**தீர்மான எண்.87 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**9.** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட அணை முனியப்பன் கோவில், மேட்டூர் அணை பூங்கா, மற்றும் காவேரி கரையோர பகுதிகளில் ஆடி 18 முன்னிட்டு, புனித நீரோட அருகில் உள்ள மாவட்டங்களில் உள்ள பொதுமக்கள் சுமார் 1,00,000 பேர், வருகை புரிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே ஆடி 18 பண்டிகைக்கு, புனித நீராட வரும், பொதுமக்கள், உடை மாற்ற ஏதுவாக தடுப்புகள், நீரோட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் நீராட தடை செய்ய தடுப்புகள், எச்சதிக்கை பதாகைகள், காவேரி பாலம் முதல், முனியப்பன் கோவில் மற்றும் ஒர்க்ஷாப் கார்னர் முதல் முனியப்பன் கோவில் வரை Focus மற்றும் Flood Light பொருத்த வேண்டி அவசியம் உள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3403/2022/இ1**

**தீர்மான எண்.88 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**10.** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் 12501 குடியிருப்புகள் உள்ளது. மேற்படி உள்ள அனைத்து வீடுகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்ள தினக்கூலி பணியாளர் ஒருவர் நாள் ஒன்றுக்கு 50 வீடுகள் வீதம் வாரத்தில் 6 நாட்களுக்கு 300 வீடுகள் வீதம் தடுப்பு பணி மேற்கொள்ள தேவைப்படும் (12501 குடியிருப்புகள் / 50 வீடுகள் / 6 நாட்கள்) 41 தற்காலிக தினக்கூலி பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் அவர்களால் 2019-2020 ஆம் ஆண்டிற்கு என நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.371/- அடிப்படையில் சுய உதவிக்குழு உறுப்பினர்களை நியமித்துக்கொள்ளவும், மாதம் ஒன்றிற்கு அதற்காகும் செலவினத்தொகை ரூ.4,71,541/-க்கும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.122,

நாள்.30.07.2020-அனுமதி பெற்று நவரத்தினம் சுய உதவிக்குழு மூலம் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது குடியிருப்புகள் அதிகமாகி 30 வார்டுகளில் 14781 குடியிருப்புகள் உள்ளது. இக்குடியிருப்புகள் அனைத்திலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்ள (14781 குடியிருப்புகள் / 50 வீடுகள் / 6 நாட்கள்) 49 நபர்கள் தேவைப்படுகின்றனர். மேற்படி 49 தற்காலிக தினக்கூலி பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் அவர்களால் 2021-2022 ஆம் ஆண்டிற்கு என நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.451/- மற்றும் EPF 13% - ரூ.58.63/- என மொத்தம் ரூ.509.63/- ஒரு நபருக்கு என்ற அடிப்படையில் 01.08.2022 முதல் 31.01.2023 முடிய ஆறு மாதங்களுக்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கு மாதம் ஒன்றிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.50 இலட்சம் வீதம் ஆறு மாதங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.45.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1431/2020/எச்1

**தீர்மான எண்.89 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**11.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செல்முறை உத்தரவு ந.க.எண்.17021/2021/இஎ1 நாள்.10.03.2022ல் நகராட்சிகளில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் OCEMS( Online Continous Effluent Monitoring System) அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (UIDSSMT) ரூ.73.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேற்படி பாதாள சாக்கடை திட்டம் 5 ஆண்டுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பில் இருந்து வருகிறது. இத்திட்டத்தில் 0.823 MLD , 0.924 MLD மற்றும் 5.452 MLD கொள்ளவு கொண்ட மூன்று கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளது. மூன்று கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உள்வரும் மற்றும் வெளியேறும் கழிவுநீரினை, Online-ல் Monitoring செய்ய கீழ்கண்ட விபரம்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | தங்கமாபுரிபட்டிணம் வாரசந்தை அருகில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் -0.824 MLD | 41.72 |
| 2 | சேலம் கேம்ப் காந்தி நகர் சுத்திகரிப்பு நிலையம்- 0.924 MLD | 41.72 |
| 3 | சர்க்கார் தோட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் - 5.452 MLD | 46.46 |
| | **மொத்தம்** | **129.90** |

எனவே, மேற்கண்ட மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட மூன்று கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் OCEMS ( Online Continous Effluent Monitoring System) அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:2574/2022/இ1**

**தீர்மான எண்.90 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**12.** இந்நகராட்சியில் வார்டு எண்.8 இல் சீத்தாமலையில் உள்ள நிரேற்று நிலையத்தின் 60HP மோட்டர் காயில் பழுதினை சிரமைத்தல் பணிக்கு ரூ.80,000 மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 12.04.2022–ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | Best Engineering ஒர்க்ஷாப் கார்னர், மேட்டூர் | 70390.00 | (–) 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.S.P.P எண்டர்பிரைசஸ் சாம்பள்ளி மேட்டூர் | 70420.00 | (+) 0.03% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வர பெற்றுள்ள 2 எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் மதிப்பீடு விகிதத்தை விட (–)0.01% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**ந.க.எண்.3300/2021/இ1**

**தீர்மான எண்.91 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**13.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.3114/2022/அம்ருத்2 நாள்.29.03.2022–ல் 15வது நிதிக்குழு மான்யம் Untied grant 2021–2022ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ந.க.எண்.45490/2012/DO1 நாள்.11.05.2022ல் குறிப்பிட்டுள்ளவாறு LED தெருவிளக்குகளை கொள்முதல் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி 30 வார்டுகளில் புதியதாக LED தெருவிளக்குகள் பொருத்த கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 100 எண்ணிக்கையிலான 20W LED | ரூ.14.40 |
| | 55 எண்ணிக்கையிலான 30W LED | |
| | 50 எண்ணிக்கையிலான 40W LED | |
| | 55 எண்ணிக்கையிலான 60W LED | |

| | | |
|---|---|---|
| | தெருவிளக்குகள் கொள்முதல் செய்தல் | |
| 2 | 20 எண்ணிக்கையிலான 20W LED<br>20 எண்ணிக்கையிலான 30W LED<br>20 எண்ணிக்கையிலான 60W LED மின் கம்பியுடன் பொருத்துதல் பணி | ரூ.4.70 |
| 3 | 15 எண்ணிக்கையிலான 20W LED<br>15 எண்ணிக்கையிலான 30W LED<br>15 எண்ணிக்கையிலான 60W LED (மின் கம்பம் மற்றும் மின்கம்பியுடன் பொருத்துல் பணி) | ரூ.10.30 |

எனவே மேற்கண்ட விவரப்படி மேட்டூர் நகராட்சி பகுதிக்கு 365 எண்ணிக்கையிலான LED தெருவிளக்குகள் ரூ.29.40 இலட்ச மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2394/2022/இ1**

**தீர்மான எண்.92 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**14.** மேட்டூர் நகராட்சி பழைய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.77 நாள்.31.05.2019–ன்படி அனுமதி பெற்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநராக முதுநிலைப் பொறியாளரின் 21.11.2019–ம் தேதிய ந.க.எண்.23651/2013/DO1 கடிதத்தின்படி அனுமதி வழங்கப்பட்டு 05.02.2020 முதல் 04.02.2021 முடிய திருவாளர்.K.கோவிந்தன்,ஓமலூர் ஒப்பந்ததாரர் மூலம் பழைய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக்காலம் 04.02.2021ல் முடிவடைந்ததால் மீண்டும் பழைய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 03.12.2021ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்டபிரேரணை அனுப்பப்பட்ட நிலையில் அவசர அவசியம் கருதி இந்நகர் மன்ற தீர்மான எண்.22 நாள்.10.02.2021–ன்படி 05.02.2021 முதல் 04.02.2022 முடிய உள்ள காலத்திற்கு ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்யப்பட்டது. மேற்படி ஒப்பந்தக்காலம் 04.02.2022–ல் முடிவடைவதால் இந்நகர் மன்ற தீர்மான எண்.21 நாள்.25.01.2021–ன்படி பிப்ரவரி–2022 முதல் ஜீலை–2022 வரை மீண்டும் ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்யப்பட்டது. மேற்படி ஒப்பந்தக்காலம் 31.07.2022–ல் முடிவடைவதால் பழைய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், பொதுமக்களின் நலன் கருதியும், திருவாளர்.K.கோவிந்தன்,ஓமலூர் ஒப்பந்ததாரரின் 11.07.2022-ந் தேதிய கடிதத்தில் தொடர்ந்து அதே விலை விகிதத்தில் செய்ய சம்மதம் தெரிவித்துள்ளதாலும் மீண்டும் ஆறு மாதங்களுக்கு 01.08.2022 முதல் 31.01.2023 வரை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி தற்போது பழைய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் திருவாளர்.K.கோவிந்தன்,ஓமலூர் ஒப்பந்ததாருக்கு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தகாலத்தை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.914/2019/இ1**

**தீர்மான எண்.93 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**15.** மேட்டூர் நகராட்சி வார்டு எண்.25 Beard shell Garden பகுதியில், தமிழ்நாடு மின்சார வாரிய பயணியர் மாளிகை முதல் ஆதிபராசக்தி கோவில் வரை செல்லும் சாலையின் வடக்கு புறமாக நகராட்சிக்கு சொந்தமான இடம் உள்ளது. மேற்படி இடமானது நகரின் மையப் பகுதியில், வளர்ந்து வரும் பகுதியாக இருப்பதால், மேற்படி இடத்தினை ஆக்கிரமிப்பு செய்வதை தடுக்க மேற்படி இடத்தில் கம்பிவேலி அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே வார்டு எண்.25 Beard shell Garden பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான மேற்படி இடத்தில் கம்பிவேலி அமைக்க இந்நகராட்சிப் பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின் படி உத்தேச செலவினம் ரூ.6.25 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3539/2022/இ1**

**தீர்மான எண்.94 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**16.** மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பொறியாளர் குடியிருப்பு கட்டப்பட்டு சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் ஆவதாலும், மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாடற்ற நிலையில் உள்ளது. மேற்கண்ட நகராட்சி பொறியாளர் குடியிருப்பு திறந்தவெளியில் சுற்றுசுவர் இல்லாமல் இருப்பதால் வெளிநபர்கள் யாரும் செல்லாத வகையில் கம்பிவேலி அமைக்க வேண்டியுள்ளது.

எனவே நகராட்சி பொறியாளர் குடியிருப்பை சுற்றி மேற்படி கம்பிவேலி அமைக்க இந்நகராட்சி பொறியாளரால் ரூ.4.10 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின் படியான உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3539–1/2022/இ1**
**தீர்மான எண்.95 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**17.** மேட்டூர் நகராட்சி பகுதியில் 03.08.2022 அன்று நடைபெறவுள்ள ஆடி 18 திருவிழாவை முன்னிட்டு பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவைப்படும் கீழ்க்காணும் கிருமி நாசினிப்பொருட்கள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாடப்பொருட்கள் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று

ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21.07.2022 ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பொருட்கள் விபரம் | தேவைப் படும் எண்கள் | அளவு | M/s.ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்பரேசன், நாமக்கல் | | M/s.ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், சேந்தமங்கலம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | விலை | தொகை | விலை | தொகை |
| 1 | பிளீச்சிங் பவுடர் | 8000 | கிலோ | 47.20 | 377600.00 | 49.00 | 392000.00 |
| 2 | சுண்ணாம்பு தூள் | 8000 | கிலோ | 9.45 | 75600.00 | 10.80 | 86400.00 |
| 3 | லெமன் கிராஸ் ஆயில் | 40 | லிட்டர் | 1947.00 | 77880.00 | 1960.00 | 78400.00 |
| 4 | கம்பூட் | 30 | எண்கள் | 649.00 | 19470.00 | 670.00 | 20100.00 |
| 5 | தொப்பி | 64 | எண்கள் | 210.00 | 13440.00 | 223.00 | 14272.00 |
| 6 | மரம் அறுவை இயந்திரம் | 1 | எண்ணம் | 34810.00 | 34810.00 | 35200.00 | 35200.00 |
| | **மொத்தம்** | | | | **598800.00** | | **626372.00** |

<u>அலுவலக குறிப்பு</u>

பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்பரேசன், நாமக்கல் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.3492/2022/எச்1

**தீர்மான எண்.96 நாள்.28.07.2022**

அனுமதிக்கப்பட்டது

**18.** மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவைப்படும் கொசு புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் 2 எண்ணிக்கை கொள்முதல் செய்தல் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய இந்நகர் மன்ற தீர்மானம் எண்.6 நாள்.28.03.2022–ன் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21.07.2022 ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பொருட்கள் விபரம் | தேவைப்படும் எண்கள் | SKYFOG Private limited, Kodambakkam, Chennai | | SRI BALAJI TRADERS, Royapettah, Chennai | |
|---|---|---|---|---|---|---|
| | | | விலை | தொகை | விலை | தொகை |
| 1 | கொசு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் | 2 எண்கள் | 94,640.00 | 1,89,280.00 | 99,624.00 | 1,99,248.00 |

<u>அலுவலக குறிப்பு</u>

பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள SKYFOG Private limited, Kodambakkam, Chennai ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.2539/2021/எச்1

**தீர்மான எண்.97 நாள்.28.07.2022**

அனுமதிக்கப்பட்டது

19. மேட்டூர் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் சேமநல நிதி தொகைகள், கூட்டுறவு சொசைட்டி, தேசிய மருத்துவ காப்பீடு, குழுக்காப்பீட்டு திட்டம், மின் கட்டணம், இறந்த மற்றும் பணி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பயன்கள் மற்றும் நகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய இதர தொகைகள் ரூ.33,59,83,852/- (ரூபாய் முப்பத்தி மூன்று கோடியே ஐம்பத்தி ஒன்பது இலட்சத்து எண்பத்தி மூன்றாயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தி இரண்டு மட்டும்) கீழ்க்கண்டவாறு செலுத்த வேண்டி உள்ளது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | கூட்டுறவு சொசைட்டி பிடித்தம் | 8713997 |
| 2 | சேமநல நிதி பிடித்தம் | 12103052 |
| 3 | ஓய்வூதிய பங்களிப்பு திட்ட நிர்வாக பங்குத் தொகை | 6752822 |
| 4 | தேசிய மருத்துவ காப்பீட்டு திட்டம் | 1151947 |
| 5 | குழுக்காப்பீட்டு திட்டம் | 4670281 |
| 6 | மின் கட்டண நிலுவை | 86200000 |
| 7 | கடன் | 177298000 |
| 8 | இறந்த மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு நிலுவைத் தொகை | 8930502 |
| 9 | பொது சுகாதாரம் – தனியார் மயம் | 4782325 |
| 10 | ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பட்டியல் தொகை | 9253121 |
| 11 | தணிக்கை கட்டணம் | 523296 |
| 12 | நில அளவை கட்டணம் | 2465591 |
| 13 | உள்ளூர் திட்டக்குழும பங்குத் தொகை | 6088179 |
| 14 | அம்மா உணவகம் | 1350739 |
| 15 | தெருவிளக்கு – தனியார் மயம் | 3978000 |
| 16 | நகரியல் பயிற்சி மைய நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்குத் தொகை | 575000 |
| 17 | குடிநீர் விநியோகம் – தனியார் மயம் | 1147000 |
| | **மொத்தம்** | **335983852** |

மேற்கண்டவாறு நகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புத் தொகைகளை இந்நகராட்சியின் நிதிநிலையை கருத்தில் கொண்டு சிறப்பினமாகக் கருதி ஏதாவது ஒரு மானியமாக ஒதுக்கீடு செய்யக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.2846/2021/பி1**

**தீர்மான எண்.98 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**20.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 18.04.2022–ம் தேதிய ந.க.எண்.15959/2021/அம்ரூத்1 கடிதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2022–2023ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது, நகராட்சியில் ரூ.14.23 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்ட பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என அறிவித்ததிற்கிணங்க, திட்டத்தினை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் சமர்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி திட்ட அறிக்கை தயார் செய்ய, நகர பகுதி முழுவதும் Gelogical Survey, ToPo Sketch, வரைபடம் மற்றும் திட்ட பிரேரணை தயார் செய்ய போதுமான உபகரணங்களோ, தொழில்நுட்ப ஆட்கள் போதுமான அளவில் இல்லாததால் திட்ட பிரேரணை தயார் செய்ய வேண்டிய நிலையில் உள்ளது என நகராட்சி பொறியாளரின் 20.07.2022–ந் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே உடனடியாக திட்ட பிரேரணை தயார் செய்ய வேண்டி உள்ளதால் ஆலோசகர் (Consultant) மூலம் குடிநீர் திட்ட பணிகள் செயலாக்கத்திற்கு திட்ட பிரேரணை தயார் செய்ய உத்தேச செலவீனம் ரூ.21,34,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2033/2022/இ1**

**தீர்மான எண்.99 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**21.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 27.04.2022–ம் தேதிய ந.க.எண்.11112/2022/டிபி1 கடிதத்தின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் சட்ட மன்ற அறிவிப்பு எண்.22–ல் மேட்டூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என அறிவித்ததிற்கிணங்க, பேருந்து நிலையம் கட்டுவதற்கான வடிவமைப்பு மற்றும் திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் சமர்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலைய கட்டிடம் கட்ட Level Topo Sketch, Structural Design, Site Plan மற்றும் வடிவமைப்பு வரைபடம், திட்ட பிரேரணை தயார் செய்ய அலுவலகத்தில் போதுமான உபகரணங்களோ, ஆட்களோ இல்லாததால், Consultant மூலம்

மேற்கொள்ள வேண்டி யஅவசியம் உள்ளது என நகராட்சி பொறியாளரின் 20.07.2022–ந் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே, ஆலோசகர் (Consultant) மூலம் பேருந்து நிலைய வரைபடம் மற்றும் திட்ட பிரேரணை தயார் செய்ய உத்தேச செலவீனம் ரூ.12,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1666/2022/இ1**

**தீர்மான எண்.100 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**22.** மேட்டூர் நகராட்சியில் ஒப்பந்ததாரர் பதிவு செய்ய திருவாளர்.K.S.P&Co (திரு.விஸ்வநாதன் த/பெ ராமசாமி மற்றும் திரு.இளங்கோ த/பெ ராமசாமி, பருவன் தெரு, கோனூர்) அவர்கள் மனு அளித்துள்ளார். மேற்படி மனு பரிசீலிக்கப்பட்டதில் மனுதாரர் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய தேவையான ஆவணங்களான சொத்து மதிப்பு சான்று, வில்லங்க சான்று வருான வரி செலுத்தியதற்கான சான்று, சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தியதிற்கான சான்று ஆகியவை இணைத்துள்ளார் எனவும் மேலும் ஒப்பந்ததாரர் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழுவின் மூலம், நடைபெற்று வரும் திட்டப்பணிகளுக்கான, ஒப்பந்தத்தில் கலந்து கொண்டு திட்டபணிகளை செய்து வருவதால், ஒப்பந்ததாரர் திருவாளர்.K.S.P&Co அவர்களை இந்நகராட்சியில் முதல் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்யலாம் என நகராட்சி பொறியாளரின் 19.07.2022–ம் தேதிய அறிக்கையில் சிபாரிசு செய்துள்ளார். எனவே ஒப்பந்ததாரர் திருவாளர்.K.S.P&Co –வை இந்நகராட்சியில் முதல் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1701 /2022/இ1**

**தீர்மான எண்.101 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**23.** மேட்டூர் நகராட்சியில் ஒப்பந்ததாரர் பதிவு செய்ய திருவாளர்.நேசன் இன்ஜினியரிங் பேப்ரிகேஷன் (திரு.S.கண்ணன் த/பெ செங்கோடன், கோவில் பாளையம், மாசிலாபாளையம் (Po) மேட்டூர்) அவர்கள் மனு அளித்துள்ளார். மேற்படி மனு பரிசீலிக்கப்பட்டதில் மனுதாரர் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய தேவையான ஆவணங்களான சொத்து மதிப்பு சான்று, வருமான வரி செலுத்தியதற்கான சான்று, தெர்மல்–1ல் ஒப்பந்ததாரராக பதிவை செய்ததற்கான நகல் மற்றும் ஒப்பந்ததாரராக பதிவை செய்ததற்கான நகல் ஆகியவை இணைத்துள்ளார். எனவே இந்நகராட்சியில் திருவாளர்.நேசன் இன்ஜினியரிங் பேப்ரிகேஷன், கொளத்தூர் அவர்களை இந்நகராட்சியில் 5–ம் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்யலாம் என நகராட்சி பொறியாளரின் 20.07.2022–ம் தேதிய அறிக்கையில் சிபாரிசு செய்துள்ளார். எனவே ஒப்பந்ததாரர் திருவாளர்.நேசன் இன்ஜினியரிங் பேப்ரிகேஷன்–னை இந்நகராட்சியில் 5–ம் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2275 /2022/இ1**

**தீர்மான எண்.102 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**24.** மேட்டூர் நகராட்சியில் ஒப்பந்ததாரர் பதிவு செய்ய திருவாளர்.சங்கீத்&கோ, (திரு.V.அறிவுகரசு ஆண்டிக்கரை (Po) கோனூர்) அவர்கள் மனு அளித்துள்ளார். மேற்படி மனு பரிசீலிக்கப்பட்டதில் மனுதாரர் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய தேவையான ஆவணங்களான சொத்து மதிப்பு சான்று, வில்லங்க சான்று, சரக்கு மற்றும் சேவை வரிக்கான GST Registration, ஆகியவை இணைத்துள்ளார். எனவே இந்நகராட்சியில் திருவாளர்.சங்கீத்&கோ அவர்களை இந்நகராட்சியில் 5–ம் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்யலாம் என நகராட்சி பொறியாளரின் 19.07.2022–ம் தேதிய அறிக்கையில் சிபாரிசு செய்துள்ளார். எனவே ஒப்பந்ததாரர் திருவாளர்.சங்கீத்&கோ–வை இந்நகராட்சியில் 5–ம் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்ற அனுமதி அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2644/2022/இ1**

**தீர்மான எண்.103 நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது**